பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

26 02 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மகா சிவராத்திரியையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. தமிழகத்தில் கோவை, ராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் பிஜேபி அலுவலக கட்டிடங்களை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று திறந்துவைத்தார்.

3. மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தேர்தல் பணிகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

4. மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்த தமிழக அரசு முன்னுரிமை அடிப்படையில் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியா - ஸ்ருதி மிஷ்ரா இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*<u>-- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<>>>>>>

மகா சிவராத்திரி இன்று கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நாட்டு மக்கள் அனைவருக்கும் சிவபெருமானின் ஆசி கிடைக்கவும், இந்தியா தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் செல்வதற்கும் பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், ஆன்மிக விழிப்புணர்வு மற்றும் ஆத்ம பரிசோதனையின் அடையாளமாக திகழும் மகா சிவாராத்திரி, மக்கள் கருணை மற்றும் இரக்க மனப்பான்மையுடன் திகழ உத்வேகம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மக்கள் அனைவரும் மகிழ்ச்சி, வளம், உடல் ஆரோக்கியத்துடன் வாழ பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கான உறுதியை இந்நாளில் வலுப்படுத்துவோம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மிகப்பெரிய ஆன்மிக விழாவாக கருதப்படும் சிவராத்திரி மக்களின் நம்பிக்கையை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தமது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியமும், வேண்டிய செல்வமும் கிடைத்து மகிழ்ச்சியுடன் வாழ சிவபெருமானை வேண்டிக்கொள்வதாக கூறியுள்ளார்.

மகா சிவராத்திரியையொட்டி சிவாலயங்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் சிறப்பு வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் கோவை மாவட்ட பிஜேபி அலுவலக கட்டிடத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று திறந்துவைத்தார்.

கோவை பீளமேடு பகுதியில் கட்டப்பட்டுள்ள அம்மாவட்ட பிஜேபி அலுவலகத்தை நேரில் திறந்துவைத்த அவர், அந்த வளாகத்தில் பிஜேபி கொடியை ஏற்றிவைத்து, மரக்கன்றையும் நட்டார்.

இந்த நிகழ்ச்சியில், ராமநாதபுரம், திருவண்ணாமலை மாவட்ட பிஜேபி அலுவலகங்களையும் திரு அமித் ஷா காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், மத்தியில் ஆளும் பிஜேபி அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதில் மும்முரம் காட்டி வருவதாக தெரிவித்தார்.

அயோத்தி ராமர்கோவில் கட்டுதல், காஷ்மீரில் 370-ஆவது சட்டப்பிரிவு ரத்து போன்ற வாக்குறுதிகள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், அடுத்தக்கட்டமாக பொது சிவில் சட்டத்தை நிறைவேற்றும் நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில், பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை, தெலங்கானா முன்னாள் ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன், தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் உள்ளிட்ட கட்சியின் மூத்த தலைவர்கள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

சுதந்திரப்போராட்ட வீரர், வீர் சாவர்கரின் நினைவு தினத்தையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சாவர்கரின் தியாகம், துணிச்சல் மற்றும் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் அவரது பங்களிப்பை நாடு எப்போதும் நினைவில் கொள்ளும் என்று தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், தலைசிறந்த சிந்தனைவாதியும், தேசியவாதியுமான சாவர்கர் தமது வாழ்க்கையின்மூலம், தியாகத்தின் உச்சத்தை தொட்டவர் என்று புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தேர்தல் பணிகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மதுரையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக், மாவட்ட ஆட்சியர் திருமதி சங்கீதா, மாநகர காவல் ஆணையர் திரு லோகநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்தக்கூட்டத்தில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, வாக்குச்சாவடி அமைத்தல் உள்ளிட்ட விவரங்கள் குறித்து திரு ஞானேஷ்குமார் கேட்டறிந்தார்.

<<<<<<>>>>>>

தெலங்கானா மாநிலத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை அனைத்து கல்வி முறைகளிலும் வரும் கல்வியாண்டு முதல், தெலுங்கு மொழி பாடத்தை கட்டாயமாக்கி அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

**CBSE, ICSE, IB** மற்றும் மாநில கல்வி வாரியம் உள்ளிட்ட அனைத்து வகையான பாடத்திட்டங்களை பின்பற்றும் பள்ளிகளுக்கும் இது பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற மொழியை தாய்மொழியாக கொண்டவர்கள் எளிதில் தெலுங்கு மொழியை கற்கும் வகையில் பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் தெலங்கானா அரசு தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . .

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவின் கடைசி நாளான இன்று லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பமேளா மற்றும் மகா சிவராத்திரி தினத்தில் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவது சிறப்பு வாய்ந்தது என்பதால் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் பிரயாக்ராஜில் குவிந்துள்ளனர்.

அனைத்து பக்தர்களும் எளிதில் நீராடி செல்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

அசம்பாவிதங்களை தவிர்க்க பாதுகாப்புப்படையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கும்பமேளாவிற்கு வரும் பக்தர்கள் சொந்த ஊர் திரும்ப ஏதுவாக, பிரயாக்ராஜில் இருந்து கூடுதல் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவாக கருதப்படும் மகா கும்பமேளாவில், இதுவரை 65 கோடியே 50 லட்சத்திற்கும் அதிகமானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கும்பமேளாவின் நிறைவையொட்டி, பிரச்சார் பாரதி தலைவர் திரு **Navneet Sehgal** வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டின் கலாச்சாரத்துடன் மக்களை இணைப்பதில் ஆகாஷ்வாணி பெரும் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

கும்பவாணி அலைவரிசை மூலம், கடந்த 48 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட ஒலிபரப்புகள் ஏராளமான மக்களை சென்றடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கும்பமேளா அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்கும், பிரயாக்ராஜுக்கு நேரில் வர முடியாதவர்களுக்கும், கும்பவாணி நிகழ்ச்சிகள் உதவிகரமாக இருந்ததாக குறிப்பிட்டுள்ள திரு **Navneet Sehgal**, வேற்றுமையில் ஒற்றுமை என்ற உணர்வுடன் பல்வேறு மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கும்பமேளாவில் பங்கேற்றிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரச்சார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு கௌரவ் துவிவேதி-யும் கும்பவாணி ஒலிபரப்பிய நிகழ்ச்சிகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

கும்பமேளா குறித்த செய்திகளை அவ்வப்போது ஒலிபரப்பியதுடன், பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பியதன் மூலம், ஆகாஷ்வாணி தமது கடமையை நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆகாஷ்வாணி தலைமை இயக்குனர் டாக்டர் பிரக்யா பாலிவால் கவுர் வெளியிட்டுள்ள செய்தியில், குறுகிய காலத்தில் அதிக நேயர்களை சென்றடைந்து கும்பவாணி அலைவரிசை வெற்றிபெற்றிருப்பதாக தெரிவித்துள்ளார்.

மகா கும்பமேளாவும் - கும்பவாணியும் மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

*<<<<<<>>>>>>*

தமிழகத்தில் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்த மாநில அரசு முன்னுரிமை அடிப்படையில் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள உதவி மருத்துவர் பணியிடங்களுக்கு மருத்துவத் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 ஆயிரத்து 642 பேருக்கு சென்னையில் இன்று பணிநியமன ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

*(வாய்ஸ் பைட் - மு.க.ஸ்டாலின் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

வெளிநாடுகளை சேர்ந்த செல்வந்தர்கள் அமெரிக்காவில் தங்கி பணிபுரிய ஏதுவாக தங்க அட்டை அறிமுகப்படுத்தப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 50 லட்சம் டாலர் தொகையை கட்டணமாக செலுத்துவோருக்கு தங்க அட்டை வழங்கப்படும்.

பின்னர், அதன்மூலம் அமெரிக்க குடியுரிமை பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தற்போது வழங்கிவரும் **EB-5** விசாவிற்கு மாற்றாக இந்த தங்க அட்டை திட்டம் அமையும் என அமெரிக்க வர்த்தக அமைச்சர் திரு **Howard Lutnick** தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியா - ஸ்ருதி மிஷ்ரா இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**'Mulheim '** நகரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-18, 17-21, 21-18 என்ற செட் கணக்கில், உக்ரைனின் **'Polina – Yevheniia '** இணையை வென்றது.

-------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் உத்திரபிரதேச அணி — மும்பை அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

---------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் கேரளா – விதர்பா அணிகளுக்கு இடையேயான இறுதியாட்டம் நாக்பூரில் இன்று தொடங்கியது.

***<<<<<<END>>>>>>***